# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 12.01.2024**

| | |
|---|---|
| **Name : சுதாகர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1, 2, 4 present. ) (Accused 3, 5, 6, absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் வாளதாசம்பட்டியில் குடியிருந்து காசாளராக ஓமலூர் டோல்கேட்டில் வேலை செய்கிறேன். எதிரிகள் எனக்கு பங்காளி முறை ஆகும். எங்களுக்கு சொந்தமான இடத்தில் எதிரிகள் குடும்பத்தார் கூரைத்தண்ணீர் சுவற்றின் மீது விழும்படி பைப் போட்டிருந்தார்கள். அதை அகற்ற சொல்லி அண்ணன் கந்தசாமி என்பவர் சொல்லியும் அவர்கள் எடுக்கவில்லை. இது சம்மந்மாக முன்விரோதம் ஏற்பட்டது.

2) கடந்த 06.09.2020-ம் தேதி காலை 10 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். எனது அண்ணன் கந்தசாமி வீடு பக்கத்தில் தான் உள்ளது. எதிரிகள் வேல்முருகன், மகேந்திரன், மோகன கண்ணன், கோவிந்தராஜ், மணி, சுலோட்சனா, சங்கீதா, ஸ்ரீதேவி ஆகீயோர் எனது அண்ணன் கந்தசாமி வீட்டிற்குள் அத்துமீறி சென்று தகாத வார்த்தையால் திட்டி, எதற்காக பைப்பை உடைத்தாய் என்று சொல்லி வேல்முருகன் கத்தியால் எனது அண்ணன் கந்தசாமியின் தலையின் வலது பக்கம் வெட்டி விட்டார். எதிரி மகேந்திரன் எனது அண்ணன் கந்தசாமியின் தலையின் மீது வெட்டி விட்டார். எதிரி மோகனகண்ணன் அவர் வைத்திருந்த கலைக்கொத்தால் முதுகின் பின்னால் குத்திவிட்டார்.

3) இதைபார்த்து சத்தம் கேட்டு வந்த எனது அண்ணி சாந்தியை எதிரி மணி கட்டையால் எனது அண்ணியின் வலது கால் தொடையில் அடித்துவிட்டார். எனது அண்ணி சத்தம் போட்டதை கேட்டு நான் சம்பவயிடம் சென்றேன். எதிரி மணி கட்டையால் எனது தலையின் முன்பக்கமும், மோகனகண்ணன் கையில் வைத்திருந்த கத்தியால் எனது வலது கெண்டை கையில் வெட்டி விட்டார்.

4) எதிரி வேல் முருகன் கத்தியால் எனது இடது கையில் வெட்டினார். எதிரி மகேந்திரன் கையில் வைத்திருந்த கட்டையால் இடது கால் பாதத்தில் அடித்து எலும்பை உடைத்துவிட்டார். இதை தடுக்கவந்த எனது அம்மா பெரியக்காவை எதிரி சுலோட்சனை இடது பக்க காதின் மீது அடித்துவிட்டார். எதிரி சங்கீதா கீோ கிடந்த கல்லை எடுத்து எனதுஅம்மாவின் தலை பக்கவாட்டில் குத்திவிட்டார். பிறகு எதிரி கோவிந்தன் கட்டையால் எனது அம்மாவின் இடது முன்னங்கையில் அடித்து எலும்பு முறிவு ஏற்பட்டது.

5) எதிரி ஸ்ரீதேவி கல்லால் எனது அம்மாவின் முதுகிலும் நெஞ்சிலும் குத்திவிட்டார். அவருக்கு அரசு மருத்துவமனையில் ஸ்கேன் செய்தோம். எதிரிகள் என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி மிரட்டினார்கள். சம்பவத்தை கேள்வி பட்டு வந்த எனது அண்ணி செல்வியை எதிரி மகேந்திரன் கையில் வைத்திருந்த கடப்பாறையால் இடது கையில் அடித்துவிட்டார்.

6) எதிரிகள் அவர்கள் வந்த காரில் ஏறி போய்விட்டார்கள். சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனை சென்று, அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனை சென்றோம். சேலம் அரசு மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்து, வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும்.

7) ஆஜரில் வேல்முருகன், மணி, மோகனகண்ணன் ஆகியோர் உள்ளனர். மற்றவர்கள் ஆஜரில் இல்லை. அவர்களை எனக்கு நன்கு அடையாளம் தெரியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய

வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. நீதிமன்றத்திலிருந்து குற்றப்பத்திரிக்கை ஏற்பதற்கு முன்பாக எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் ஆமாம். அதில் நான் எந்தவித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இந்த வழக்கினுடைய எதிர் வழக்கு இன்னும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**ஓம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 344/2023**
**Prosecution witness : அ.சா. 2** **Date : 12.01.2024**

| Name : கந்தசாமி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 1, 2, 4 present. ) (Accused 3, 5, 6, absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வாளதாசம்பட்டியில் குடியிருந்து தறி வேலை செய்து வந்தேன். தற்போது செல்வதில்லை. எதிரிகள் எனக்கு உறவினர் மற்றும் பக்கத்து வீட்டை சார்ந்தவர்கள். எதிரிகள் தண்ணீர் பைப் போட்டதில் அதில் வரும் தண்ணீர் எங்கள் வீட்டில் விழுந்ததில் முன்விரோதம் ஏற்பட்டது.

2) கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக காலை 10 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எதிரிகள் வேல்முருகன், மகேந்திரன், மோகன கண்ணன், கோவிந்தராஜ், மணி, சுலோட்சனா, சங்கீதா, ஸ்ரீதேவி ஆகீயோர் எனது வீட்டிற்குள் அத்துமீறி சென்று தகாத வார்த்தையால் திட்டி, வேல்முருகன் மற்றும் மகேந்திரன் கத்தியால் எனது தலையின் வலது பக்கம் வெட்டி விட்டார். எதிரி மோகனகண்ணன் முதுகிலும், கையிலும் குத்திவிட்டார்.

3) எனது மனைவியையும், எதிரிகள் ஆயுதங்களால் அடித்துவிட்டார்கள். எனது அம்மா பெரியக்காவை எதிரிகள் சுலோட்சனா, சங்கீதா, ஸ்ரீதேவி ஆகியோர் கட்டையால் அடித்துவிட்டார்கள். என்னுடைய தம்பி சுதாகர் அ.சா.1 ஐ எதிரிகள் ஆயுதத்தால் அடித்துவிட்டார்கள். சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனை சென்று, அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனை சென்றோம்.

4) ஆஜரில் வேல்முருகன், மணி, மோகனகண்ணன் ஆகியோர் உள்ளனர். மற்றவர்கள் ஆஜரில் இல்லை. அவர்களை எனக்கு நன்கு அடையாளம் தெரியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இந்த வழக்கினுடைய எதிர் வழக்கு இன்னும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**ஓம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 12.01.2024**

| | |
|---|---|
| **Name : சாந்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1, 2, 4 present. ) (Accused 3, 5, 6, absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வாளதாசம்பட்டியில் குடியிருந்து தறி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் தண்ணீர் பைப் போட்டதில் அதில் வரும் தண்ணீர் எங்கள் வீட்டில் விழுந்ததில் முன்விரோதம் ஏற்பட்டது.

2) கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக காலை 10 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எதிரிகள் வேல்முருகன், மகேந்திரன், மோகன கண்ணன், கோவிந்தராஜ், மணி, சுலோட்சனா, சங்கீதா, ஸ்ரீதேவி ஆகீயோர் எனது வீட்டிற்குள் அத்துமீறி சென்று தகாத வார்த்தையால் திட்டி, ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் எனது கணவரை கத்தியாலும், கட்டையாலும் தலையிலும், முதுகிலும் அடித்தார்கள். வெட்டினார்கள். என்னை எதிரி மணி கட்டையால் வலது கால்தொடையில் அடித்தார்கள்.

3) பிறகு அ.சா.1 ஐ எதிரிகள் ஆயுதத்தால் கால், கை , தலையில் அடித்துவிட்டார்கள். எனது மாமியார் பெரியக்காவை எதிரிகள் காதிலும், தலையிலும் கட்டையால் அடித்தார்கள். அ.சா.1 ன் மனைவியையும் எதிரிகள் ஆயுதத்தால் அடித்துவிட்டார்கள். சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனை சென்று, அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனை சென்றோம்.

4) ஆஜரில் வேல்முருகன், மணி, மோகனகண்ணன் ஆகியோர் உள்ளனர். மற்றவர்கள் ஆஜரில் இல்லை. அவர்களை எனக்கு நன்கு அடையாளம் தெரியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கினுடைய எதிர் வழக்கு இன்னும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**ஒம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 12.01.2024**

| | |
|---|---|
| **Name : பெரியக்கா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1, 2, 4 present. ) (Accused 3, 5, 6, absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வாளதாசம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார்கள். எதிரிகள் தண்ணீர் பைப் போட்டதில் அதில் வரும் தண்ணீர் எங்கள் வீட்டில் விழுந்ததில் முன்விரோதம் ஏற்பட்டது. கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக காலை 10 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எதிரி சுலோட்சனா தடியால் எனது காதின் மீது அடித்ததில் காது கிழிந்து விட்டது. எதிரி சங்கீதா தடியால் எனது தலையில் அடித்ததில் எனக்கு மண்டை உடைந்துவிட்டது. எதிரி சங்கீதாவின் மகள் எனது தலையில் தடியால் அடித்தார்.

2) எதிரி கோவிந்தன் தடியால் இடது கை மணிக்கட்டின் மேல் அடித்துவிட்டார். எதிரிகள் பைப் போட்டது சம்மந்தமாக ஆஜர் எதிரிகள் அ.சா.1 மற்றும் 2 ஐ ஆயுதங்களால் அடித்துவிட்டார்கள். அதை கேட்கசென்ற என்னையும் எதிரிகள் ஆயுதங்களால் அடித்துவிட்டார்கள். சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனை சென்று, அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனை சென்றோம்.

3) ஆஜரில் வேல்முருகன், மணி, மோகனகண்ணன் ஆகியோர் உள்ளனர். மற்றவர்கள் ஆஜரில் இல்லை. அவர்களை எனக்கு நன்கு அடையாளம்

தெரியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கினுடைய எதிர் வழக்கு இன்னும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**ஓம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 12.01.2024**

| | |
|---|---|
| **Name : செல்வி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1, 2, 4 present. ) (Accused 3, 5, 6, absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வாளதாசம்பட்டியில் குடியிருந்து கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.2 குடும்பத்தாருக்கும், எதிரிகள் தண்ணீர் பைப் போட்டதில் அதில் வரும் தண்ணீர் விழுந்ததில் முன்விரோதம் ஏற்பட்டது.

2) கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக காலை 10 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, சத்தம் கேட்டு அ.சா.1 ன் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, என்னிடம் எதிரி மகேந்திரன் எனது கணவர் எங்கே என்று கேட்டார். நான் சொல்லாததால் அவர் வைத்திருந்த இரும்பு கடப்பாறையால் எனது இடது கையில் அடித்து, கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்.

3) கந்தசாமி, சுதாகர், பெரியக்கா, சாந்தி ஆகியோர்கள் பலத்த ரத்த காயத்துடன் இருந்தார்கள். சுதாகருக்கு தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. எதிரிகள் பைப் போடுவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு அடித்ததாக சொன்னார்கள். எதிரிகள் அவர்கள் வந்த காரில் ஏறி சென்றுவிட்டனர்.

4) ஆஜரில் வேல்முருகன், மணி, மோகனகண்ணன் ஆகியோர் உள்ளனர். மற்றவர்கள் ஆஜரில் இல்லை. அவர்களை எனக்கு நன்கு அடையாளம்

தெரியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கினுடைய எதிர் வழக்கு இன்னும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**ஓம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**